தி: முருந்தன்

உ
கணபதி துணை



# தெல்லிப்பழை - வீணாக்கடவை
# காசிவிநாயகர் தேவஸ்தானம்
# வரலாறு - பதிகம் - ஊஞ்சல்

தெல்லிப்பழை
பாலர் ஞானோதய சபை வெளியீடு

பரிதாபி வருடம் ஆவணி மாதம்

1972 ரூபா 1 - 00

குகன் அச்சகம், தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கு 15-9-71 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டுத் தூபி அபிஷேகம் நடைபெறுகின்றது.



பிரதம குரு : நயினை, சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்.
தூபியபிஷேகஞ் செய்பவர் : கன்னாகம், சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. முகுந்தன்

உ

பாலர் ஞானோதய சபையின் ஆரம்ப இயக்குனருள் ஒருவரும்
கொழும்பு - கல்வி அமைச்சில் உத்தியோகம் வகிப்பவரும்,
கொழும்பு - கொம்பனித்தெரு
சைவ முன்னேற்றச் சங்கச் சமயக் காரியதரிசியும்
ஈழத்துத் திருநெறி மன்றத்தின்
"மெய்கண்டார்" மலரின் உதவி ஆசிரியருமான

## சைவப் பெரியார் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை

அவர்கள் உவந்தளித்த

# அணிந்துரை

இலங்கையில் பாடல் பெற்ற ஸ்தலங்கள் இரண்டாக இருந்த போதிலும், இறையருள் முகிழ்த்த இடங்கள் பலவாகிப் பரவியுள்ளன. அவற்றுள் யாழ்ப்பாணத்துத் தெல்லியம்பதியில் வீணைக் கடவை என்னும் திருப்பதியில், வழிபடுவோரின் வினைகளை வேரறுக்கும் காசி விக்னவிநாயகர் எழுந்தருள் பாலிக்கும் தேவஸ்தானம் மிகவும் பழமையும் புதுமையும் வாய்ந்ததாகும்.

தெய்வ அநுக்கிரகம் கைவரப்பெற்ற ஞானிகளின் வருகைகளினால் வையகமும் தெய்வலோகமாகத் திகழ்கின்றது. அவ்வித தெய்வகடாட்சம் நிரம்பியுள்ள காசி விக்னவிநாயகரின் தேவஸ்தானத்தின் வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்த பெரியோர்கள் சிலரின் வாய்ச்சொற் கேட்டு அறிந்த சில அரிய உண்மைகளை வைத்துக்கொண்டு எடுத்த இம் முயற்சியைப் போற்றாமலிருக்க இயலாது.

1920 ஆம் ஆண்டுக்கு முன்பாக, தெல்லியம்பதியின் அங்கமான வவுணவத்தையில் வதிந்த சைவப் பெருமகனார் திரு. வை. சி. கந்தையாபிள்ளை அவர்களுடைய வேண்டுகோட்கிசைந்து, அக்காலம் ஈடும் எடுப்பும் கொண்ட நல்லிசைப் புலவர் — வயாவிளான் திரு. சி. நல்லதம்பி அவர்களால், காசியிற் பிள்ளையார் பேரிற் பதிகம் ஒன்று பாடப்பட்டுள்ளது. அது இச் சிறு நூலில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அரை நூற்றாண்டுக்குமுன்பிருந்தே இத் தேவஸ்தானத்தில் எழுந்தருளிக் கிருபாகடாட்சம் புரிந்துவரும் புண்ணியமூர்த்தியாகிய காசி விக்னவிநாயகரின் அற்புதச் செயல்களை இப் பதிகம்மூலம் அறியக்கிடக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்லவா? மேலும், ஒரு அற்புதமான திருவூஞ்சற் பாவும் இச் சிறு நூலில் இடம்பெற்றுள்ளது. காசி விக்னவிநாயகருடைய பக்த கோடிகளுக்கு ஒரு கற்பகதருவென்றே கருதலாம்.

கால்நூற்றுண்டுக்கு மேலாக இத் தேவஸ்தானத்தோடும், சிவமுத்தி எய்தப்பெற்ற பிரம்மஸ்ரீ மு. சிவகடாட்சக்குருக்கள் ஐயாவோடும், அன்னாரது தலைமையில் இயங்கி இன்றுவரை பல நல்ல சமயத் தொண்டுகளை ஆற்றிவரும் "பாலர் ஞானோதய சபை" யோடும், குருக்கள் ஐயாவின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யப் பெருவிருப்புடன் உழைக்கும் அவர் தம் புத்திரன் பிரம்மஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்களுடனும் சேர்ந்து ஐங்கரனுக்கு அடியேன் அடிமைத் தொண்டாற்றும் பெரும்பேறு பெற்றவனுகையினுல், இச் சிறு நூலுக்கு இந்த அணிந்துரையை எழுதும் வாய்ப்புப் பெற்றவனுயினேன்.

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு."

மெய்யடியார்கள் இந்நூலை இருகரங்களினுலும் உவந்தேற்று உய்தி பெறுவார்களாக!

திருச்சிற்றம்பலம்

காசியிற் பிள்ளையார் கோவிலடி
தெல்லிப்பழை
21 - 8 - 1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தெல்லிநகர் - ஸ்ரீ காசிவிநாயகர்

# தேவஸ்தான வரலாற்றுச் சுருக்கம்

"குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணு மலையமர்ந் தாரே." எனவும்
"பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே."
எனவும்

நாயன்மார்களால் தேவாரப் பதிகங்கள்மூலம் பெருமை வாய்க்கப்பெற்ற கோவில்களைத் தன்னகத்தேகொண்டு மிளிரும் இலங்காபுரியின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் திலகமென மிளிரும் சிறு பட்டினம் தெல்லிப்பழையாகும். யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறையை நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் அருகாமையில், தெல்லிப்பழைக்கும் மல்லாகத்துக்கும் மத்தியில், மேற்கு வாயிலாகக் குடிகொண்டு பக்தகோடிகளின் பாவ வினைகளை வேரறுத்துப் பரகதி தந்தருளும் தந்திமுகத்தோனின் ஆலயம் அமைந்துள்ளது.

இயற்கை அன்னையின் சகல செல்வங்களாலும் நிறைந்த தெல்லிநகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானின் வருகை மிகவும் விநோதமானது. ஆதி அந்தமில்லாத ஆண்டவனுக்கு ஒரு எல்லைக்கோடு போட்டுக் காட்ட இயலாதன்றே!

அயோத்தி, மதுரா, மாயா, காசி, காஞ்சி, துவாரகா என்று போற்றப்படும் புண்ணிய ஸ்தலங்களுள் ஒன்றாகிய காசியம்பதியைத் தரிசித்துவிட்டுத் தமது வாசஸ்தலமாகிய தெல்லியம்பதியை நோக்கி வந்த மாதுசிரோன்மணி ஒருவர் விக்னேஸ்வரப் பெருமானின் இலிங்கம் ஒன்றினைத் தம்முடன் கொண்டுவந்து, "வீணைக்கடவை" என்னும், ஷ்டி காசிவிநாயகர் ஆலயம் இருக்கும் பதியில் வைத்து முப்போதும் பூசைபுரிந்து வழிபடலானார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு வழிபட்டு வரும் நாட்களில், வள்ளியை வதுவை செய்ய வந்த அறுமுகப் பெருமான் வேங்கை மரமாகத் தோன்றியது போன்று, ஷ்டி இலிங்கத்துக்கு நிழலைப் பரவ ஆரம்பித்தது. இவ் விருக்ஷத்தின் வளர்ச்சியையும் வனப்பையுங் கண்ட அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியரான ஆங்கிலேயர் இம்மரம் எவ்வகையைச் சார்ந்தது என்பதனை ஆராயப் புகுந்தும் அறியவியலாது போயினர் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ் விருக்ஷத்தினைக் கண்டு களிக்கும் பாக்கியம் எமக்கில்லாது போயிற்று. அதற்கும் காரணம் உண்டு. மது வருந்திய அறிவிலி ஒருவன் இம் மரத்தைத் தொட்டுத் தீண்ட, அது காரணமாக இவ்விருக்ஷம் எவ்விதம் தோன்றியதோ அவ்வாறு மறைந்துவிட்டது என்று கூறப்படுகின்றது.

காசிவிநாயகரின் கருணைகடாட்சங்களை அள்ளிப் பருகிய எம் மூதாதைகள் ஒரு ஆலயம் அமைத்து, காசிவிநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்து முறையாக வழிபாடுகள் செய்வதற்கு வேதாகம விற்பன்னர்களை வரவழைத்துச் சகல ஏற்பாடுகளையும் செய்வித்தனர். இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நடந்தேறியது எனக் கொள்ளலாம்.

ஏதோ காலம் செய்த சோதனையினல் காசிவிநாயகர் ஆலயமும் இரண்டாவது கும்பாபிஷேகத்தின்பின், வழிபடுவோர்களின் கவனக்குறைவினலும், நாட்டில் நிகழ்ந்த பஞ்சங்களினலும் சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக வறிதே இருந்துவிட்டது. வழிபடுவோரது வாழ்வை வளரச் செய்யும் வல்லமை நிரம்பிய ஐங்கரன் தமது ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுவான் கருதித் தமது மெய்யடியார்களுக்கு அநுக்கிரகம் பாலித்தார். பலரது விடாமுயற்சியால், பழுதடைந்த ஆலயத்தைப் புதுக்கும் வேலைகள் ஆரம்பமாயின. மூன்று ஆண்டுகளில் முக்கிய திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டு, 15-9-1971 இல் மூன்றுவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. இக் கும்பாபிஷேகத்தின் சிறப்பை எம்போன்முரால் எழுத்தில் எழுத இயலாது. யாழ்ப்பாண நந்நகரில் உள்ள வேதாகம விற்பன்னர்களான குருக்கள்மார் பதின்மர் பங்குகொண்டு, ஐந்து யாகம், நவகுண்டம் என்பன அமைக்கப்பெற்று மிகவுஞ் சிறந்த முறையிற் பல பக்தகோடிகள் பரவசமாகக் கண்டு தொழ, இக் கும்பாபிஷேகம் நடத்தேறியது. இக் காட்சியை இன்னுமோர் முறை காணும் பேறு வருமா என ஆசை கொண்டோர் பலர் எனலாம்.

இக் கும்பாபிஷேகத்தின்போது, மகாவிஷ்ணு, வயிரவர், நாகதம்பிரான், சண்டேசுரர், ஸ்தம்பப்பிள்ளையார், மூஷிகம், பலிபீடம் முதலாம் மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பல சைவப் பெரியார்களின் உபயமாகவே இவைகள் நிறைவேற்றப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியிலிருந்து கொண்டுவந்து பூசிக்கப்பட்ட இலிங்கம் மகா மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நித்திய நைமித்தியங்கள் வழுவற நடைபெற்று வருகின்றன.

மேலும் பல திருப்பணிகளை நிறைவு செய்து கொடிஸ்தம்பம் நாட்டுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. சைவ அன்பர்களும் செல்வச் சீமான்களும் நிதிக்குவை அளித்து இவ்வாலயத்தை இனிது நிறைவேற்றுவார்களாக!

வணக்கம்

காசிவிநாயகர் தேவஸ்தானம்
தெல்லிப்பழை
*23 - 8 - 1972*

**சி. கணேசலிங்கக்குருக்கள்**
ஷெடி ஆலய பிரதம குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வெளியீட்டுரை

இன்று உங்கள் கரங்களில் உலாவும் இச் சிறுமலர் எமது சபையினது இரண்டாவது வெளியீடு என்று கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளுகின்றோம். முதலாவது வெளியீடு, எமது வெள்ளி விழா மலர் என்பது தெரிந்ததே!

இம் மலருக்குக் கருவூலமாக இருப்பது முப்பொருட்கள். பதி, பசு, பாசம் என்று சொல்லுவோமே, அவை போன்று. அதாவது :

1. காசிவிநாயகர் வரலாறு.
2. காசிவிநாயகர் பதிகம்.
3. காசிவிநாயகர் ஊஞ்சல்.

முதலாவதாகிய வரலாற்றுக் கோவையை, எம் மூதாதைகளின் வாய்வழி வந்ததாகக் கேட்டு எமக்கு அளித்தவர், ஷெ தேவஸ்தானப் பிரதம குருக்கள்ஐயா பிரம்மஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள். இரண்டாவதாகிய பதிகம் மிகவும் பழமை வாய்ந்தது. இது இப்போது அருகி வந்துவிட்டது. இதனை மறுபிரசுரம் செய்து புத்துயிர் அளிக்கவேண்டும் என விரும்பி, எமக்கு அளித்த சைவப் பெரியார் தெல்லிப்பழை கிழக்குத் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராகவிருந்து இளைப்பாறிய ஆசிரியர் திரு. சி. செல்லத்துரை என்பவர். இவருக்கு எமது நன்றி உரித்தாகும். இதே பிரதி ஒன்றை வவுணவத்தையிலுள்ள இளைஞனும் தந்து உபகரித்தமைக்கு நன்றி. மூன்றாவதாகத் திருவூஞ்சல். இதனையும் இந் நூலிற் சேர்ப்பது மிகவும் அவசியம் எனக் கண்டு சேர்த்துள்ளோம். ஆக இவை மூன்றும் சேர்ந்து நூலுருக்கொண்டு விட்டது.

இந் நூலைப் பார்வையிட்டும், இதற்கு ஒரு அணிந்துரை தந்தும் எமக்கு ஊக்கம் அளித்த சைவப் பெரியாரும், எமது சபையின் காவலருமான திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கும், எமது அச்சு வேலைகள் எதுவாயினும் மனம் உவந்து கையேற்று, மிகவும் அழகுறவும், சிரமம் பாராமலும் முடித்துத் தரும் தெல்லிப்பழை குகன் அச்சகத்தாருக்கும் எமது சபை என்றும் கடமைப்பட்டுள்ளது.

இந் நூலை, காசி விக்னவிநாயகருடைய திருமலர்ப் போதில் வைத்துச் சிரம் தாழ்த்தி அமைகின்றோம்.

வணக்கம்.

காசி விநாயகர் தேவஸ்தானம்
தெல்லிப்பழை, 23 - 8 - 72

பாலர் ஞானோதய சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை



# பதிகம்

## விநாயகர் துதி

(வெண்பா)

சீராருந் தெல்லிநகர் சேரும்வீ ஞக்கடவைப்
பேரார் கணேசப் பெருமான்மேல் — ஏராரும்
நற்பதிகம் பாடுதற்கு நாடுமவன் பாதமலர்ப்
பொற்பதும மேயென் புகல்.

## ஆசிரிய விருத்தம்

சீரே றிலங்கையின் சிரமிதென வேயறிஞர்
செப்புயாழ்ப் பாணவடபால்
திருவருட் பெருநகுல வரையமர்ந் தடியர்துயர்
தீர்க்குநகு லேசமூர்த்தி
பேரேறு மாவையம் பதியிலமர் கந்தவேள்
பேணவரு முத்துமாரி
பின்னமில் லாததுர்க் காதேவி முதலினோர்
பெருமையுட னமர்தளிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரேறு செந்நெல்கன் னற்கழனி யுந்தென்னை
யிலசமுயர் பெண்ணைபூகம்
இனியதேன் றேடைமா கதலிபல் வருக்கைசேர்ந்
தேற்றமுறு சோலையுஞ்சூழ்
காரேறு தெல்லியம் பதியில்வீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

மங்கள நிறைந்தவா னனமுமுக் கண்ணுமுயர்
மன்னுமங் குசபாசமான்
மகிழ்தருஞ் சங்கமழு தோட்டிமுத லாமிவைகள்
மருவுந் திருக்கரமுநற்
தங்கமுறு குண்டலஞ் சேர்திருக் கர்ணமும்
தண்மலர்த் துகிலாடைபொன்
சாலுமரை ஞாணரையு மிகுசிலம் பொலிநடந்:
தான்விளங் கிடுபாதமும்
தங்குமுப் புரிமார்ப னேநீல மேனியா
தண்ணருட் கொண்டு *அடியன்
தன்னையிச் சகமீது காத்திரட் சிப்பதுன்
றன்னின் பெருங்கடமையே
கங்குல்பக லடியர்தொழு தெல்லிவீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

அழகிலுயர் வல்லபைப் பெயர்புத்தி சித்தியா
மாதிசத் திகளையுடையோய்
அருண்மருவு வீரபத் திரர்வயிர வக்கடவுள்
ஆறுமுக வேள்முன்னவா
புளகமிக வுற்றடிய ரெத்தொழில்கள் புரியினும்
போற்றியுனை முன்பணிகுவர்
புண்ணியா வடியர்தொழில் மீதிலே விக்கினம்
போந்திட விடாதுகாப்பாய்

* அடியன் கந்தையபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளகைமன் னகரன்ன மகிழ்வினன் னகரென்று
அரியகவி வாணர்மெச்சி
ஆசிகூ றும்பெரிய ருத்யோகர் பிரபுக்கள்
அன்புடன் வாழுநகராங்
கழகமுயர் தெல்லியம் பதியில்வீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

திருமருவு மறையாதி போற்றுபிர ணவசொருப
சிந்துர முகாதிபதியே
தெய்வேந்த்ர ஞதிதே வரையலைத் துக்கொடிய
செயலாற்று கயமுகவனை
உருமருவு கயமுகப் பெருவடிவு கொண்டுசெய
முற்றமர ரைக்காத்தவா
உன்னுபய பாதங்கள் போற்றுமடி யன்றனக்
குறுதுயரை நீக்கியருள்வை
மருமருவு மாலையணி மார்பனே திடமுலவு
மாசிலொரு தந்தமுள்ளோய்
வடிவேறு மாகுவா கனமிவர்ந் துலகமிசை
வந்துநட மாடுதேவே
கருமருவு முயிர்கள்மகிழ் தெல்லிவீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

விண்டலத் துள்ளமெய்த் தேவரும் மறையோது
மெய்ஞ்ஞான முனிவரான
மேதகைய சித்தர்கந் தருவர்நா ரதராதி
வேண்டிநற் பணிசெய்முதல்வ
மண்டலத் துள்ளபுன் மனிதர்க ஞனைப்பணிய
வகையறிவ ரோசத்திய
மாசைவ முதல்வனே நீதிகிளர் முன்னவா
மதியிலேன் நித்தமன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுனது பாதங்க ளேப்பூசை செய்துமிக்
குவலயந் தனிலோர்குறை
குற்றமில் லாதுநற் சுத்தமெய்ப் பத்தியிவை
கூடியுல விடவருளுவை
கண்டடியர் தொழுதெழுந் தெல்லிவீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

உண்மைதிக மானந்த மோக்கநிலை தந்துதவு
முத்துங்க கருணுகரா
உயர்சின்ம யானந்த தேசோ மயச்சொருப
ஓதுசூக் குமசித்தனே
திண்மைதிகழ் இராவணன் தவவலியி ஞற்பெற்ற
சிவலிங்க மதுபூமியிற்
சேர்ந்துவே ரோடவரு ளார்ந்துசெய் திடுதலைச்
செயவலி படைத்ததேவே
வண்மைதிக முன்னருட் கீர்த்திதனை யிரவுபகல்
வாயிஞற் சொல்லிவாழ்த்த
வரமெனக் கருளீச வுமையம்மை நித்தமடி
வைத்துமுத் தாடுகுமரா
கண்யநிறை தெல்லியம் பதியில்வீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

அவனிமிசை வஞ்சகம் படிறுலோ பம்முதல
வாங்குண மகற்றியுண்மை
அண்ணுபுண் ணியநேர்மை தண்ணளி யிரக்கமெய்
யறிவுசேர் சுத்தபத்தி
தவநிறைந் திடுபெரியர் தற்குள்ள குணமெலாந்
தானுற்று யான்வாழ்ந்திடத்
தருகுவாய் மாகிருபை யேரம்ப நாதனே
தருணமிவ் வேளைமுந்நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவவினைகள் யாவும்ரவி யைக்கண் டகன்றிடும்
பனிபோல வகலவருள்வை
பண்ணவர்க் கரசனு மிந்திரன் பெற்றசா
பத்தினை யகற்றவிலையோ
கவினுலவு தெல்லியம் பதியில்வீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

தினமமரர் போற்றுதிரு மான்மருக னேதிருச்
செந்திவே லன்முன்னவா
சீர்மன்றுள் நின்றுநட மிடுமைய னேயரவு
சேர்சிலம் புப்பாதனே
வனமுலவு மான்பெற்ற மகள்வள்ளி யைச்சுப்ர
மணியனு முனதிளையவன்
மணமுடித் திடவவட் குறுபய மொழிந்துமண
மல்கவைத் திடுகயமுகா
தனமெனும் நிதிநித்ய சுகமெனுங் கதிபத்தி
சார்ந்திட வெனக்கருளுவை
சச்சிதா னந்தமய வற்புத சொரூபனே
தற்பரா விதுதருணமே
கனமுலவு தெல்லியம் பதியில்வீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

அற்புத நிறைந்தசுந் தரமூர்த்தி நாயனு
ரோடரன் சந்நிதானத்
தருளாதி யாமுலா தன்னைமு னரங்கேற்ற
மாக்கவெண் ணியசேரமான்
பொற்புலவு மவ்வையார் தன்னைவிட் டிங்ஙன்
புகுந்தமே யென்றெண்ணிடப்
போதமிகு முன்னுபய பதமலர்க் குப்பூசை
புரியவ்வை யாரறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பரா பூசைதனை விரைவினில் முடித்தங்கு
தான்செல்ல வெண்ணுமவ்வை
தன்பூசை தனைமுடிப் பித்துத் துதிக்கையாற்
சார்கயிலை சேருவித்தோய்
கற்புலவு தெல்லியம் பதியில்வீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

தனிவேறி லாதபர சிவதரிச னஞ்செயத்
தான்பிரம னரியிந்திரன்
சாற்றுமுத லாந்தேவ ரனைவரும் வெள்ளியந்
தனிமலை யடைந்தபோதுன்
இனியநற் பணிகார கரமும்லம் போதரமு
மெழில்நடன முங்கண்டுமே
ஏழனஞ் செய்சந்தி ரன்மீது சாபமிக
வேற்றியெவ ரேனுமிவனை
நனிமிக்க வாவணியில் வருசதுர்த் தித்திதியில்
நன்குகா ணற்கவென்று
நவின்றருள் செயுங்கரி முகக்கடவு ளேயெற்கு
நல்லருள் புரிந்துகாப்பாய்
கனிமிகுஞ் சோலைசூழ் தெல்லிவீ ஞக்கடவை
கருணையொடு மேவியமருங்
கங்கையணி சிவமைந்த தந்திமுக வைந்துகர
காசியிற் பிள்ளையாரே.

சி. நல்லதம்பி
வயாவிளான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# வீணைக்கடவைக் காசிவிநாயகர் திருவூஞ்சல்

### காப்பு

நாரணனு நான்முகனு நாடிக் காணு
நாயகனும் நாயகியு ஞால முய்ய
ஆரணவா கமமூல மனுவாய்க் கூடி
அரியதிரு விளையாடல் புரியு நாளில்
வாரணமா முகமுமைந்து கரமுங் கொண்டே
வந்தருளுந் தொந்திவயிற் றெந்தா யுன்மேல்
ஏரணவு மூஞ்சலிசை தமிழாற் பாட
இருசரண வரணமல ரிணைகாப் பாமே.

### நூல்

சீர்பூத்த மாமாயை யருளிற் பூத்த
சிவம்பூத்த நாதவிந்து தூணு நாட்டி
ஏர்பூத்த வக்கரங்கள் விட்டம் பூட்டி
இசைபூத்த கலையாதி வடங்கள் மாட்டிப்
பார்பூத்த வோங்கார பீடங் கூட்டிப்
பயன்பூக்க வாக்கியபொன் னூஞ்சன் மீதே
கார்பூத்த தெல்லிநகர் வீணைக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

ஒளியோங்கு மிருசுடரும் கவிகை தாங்க
உரமோங்கு மனிலனெழிற் கவரி வாங்க
நளியோங்கு மடல்வருணன் பனிநீர் தூவ
நயமோங்கு தருமனுய ருடைவாள் காவத்
தெளியோங்கு தவமுனிவ ராசி பேசச்
சீரோங்கு மமரர்தரு மலர்கள் வீசக்
களியோங்கு தெல்லிநகர் வீணைக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணமரும் சித்திரயாழ் முனிவன் மீட்டப்
பாலமரும் மாலவனார் முழவு கூட்ட
விண்ணமரு மரம்பையர்கள் நடன மாட
விரையமரு மலரவனார் தாளம் போட
எண்ணமரும் விஞ்சையர்கள் கானம் பாட
இருளமரும் மலத்தொடர்ச்சி யிரிந்தே யோடக்
கண்ணமருந் தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

ஆவணியு மைந்திளநீர் பனிநீர் கூட்டி
அருளணியு மந்திரநீர் நறுநீ ராட்டித்
தூவணியுந் துகிலணிந்து கலன்கள் மாட்டித்
தூபமணி தீபநிரை தோன்றக் காட்டிப்
பாவணிசொன் மாலைமலர் மாலை சூட்டிப்
பழமையணி யடியவர்கள் பரவி யேத்தக்
காவணியுந் தெல்லிநகர் வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

நீர்மலிந்த செய்யசடை நிமல னோர்பால்
நிறைமலிந்த சிமயமலை யமலை யோர்பால்
கூர்மலிந்த முத்தலைவேற் குமர னோர்பால்
குணமலிந்த அறுமுகத்துக் குழக னோர்பால்
தார்மலிந்த நெடுமாலும் அயனு மோர்பால்
தமிழ்மலிந்த மறையோது மடிய ரோர்பால்
கார்மலிந்த பொழிற்றெல்லி வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

வந்தவினை விக்கினங்கள் தீர்ப்பாய் என்றும்
மந்திரவோங் காரமுதல் ஆனாய் என்றும்
சந்திரசா பந்தவிர்த்த தலைவா என்றும்
தக்கனுக்கு மிக்கவரம் தந்தாய் என்றும்
சிந்துரமா முகனைவதை செய்தாய் என்றும்
தேவாதி தேவவென்றும் சேவித் தேத்தக்
கந்தமலி பொழிற்றெல்லி வீணாக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைமுகன் வலிமைகெடுத் தருளல் பாடி
அவ்வைதமிழ்க் கருள்புரிந்த அன்பு பாடி
ஞானமுனி குண்டிகைநீர் கவிழ்த்தல் பாடி
நம்பிக்குக் கலையளித்த நயமும் பாடி
மானமிகு சனகனையாட் செய்தல் பாடி
வல்லபையாள் தோள்புணரும் வளமும் பாடிக்
கானமலி தெல்லிநகர் அடியர் போற்றக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

அற்புதகுஞ் சரமுகவ பால நேத்திர
ஆரம்ப தேவகண நாத ஞான
சிற்பரமுப் புரதகனர் பரவு மோன
சித்திபுத்தி யிருபாக தேவ தேவ
மற்புயலம் போதரமா தங்க ரூப
வக்கிர தந்தமா யூரவங் குசபாச
கற்புமலி தெல்லிநகர் வீணுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

மங்கலவா ரணமுகத்தீ ராடீ ரூஞ்சல்
மந்திரவா ரணமுகத்தீ ராடீ ரூஞ்சல்
தங்கவரைப் புத்தகத்தீ ராடீ ரூஞ்சல்
சார்ந்தவரைப் புத்தகத்தீ ராடீ ரூஞ்சல்
அங்கணருங் குளத்துடையீ ராடீ ரூஞ்சல்
ஆசையருங் குளத்துடையீ ராடீ ரூஞ்சல்
கங்கணஞ்சூழ் பொழிற்றெல்லி வீணுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே யாடீ ரூஞ்சல்.

பூவாழி பொன்னின்மழை பொலிந்து வாழி
பூசுரரும் ஆனிரையும் பொலிந்து வாழி
தேவாழி ஐந்தெழுத்தும் நீறும் வாழி
செந்தமிழ்மந் திரம்வாழி தேவி வாழி
பாவாரும் மயில்வாழி அடியார் வாழி
பரவுதமிழ் ஊஞ்சலிசை பத்தும் வாழி
காவாரும் தெல்லிநகர் வீணுக் கடவைக்
காசிவிக்ன விநாயகரே வாழி வாழி.

திருச்சிற்றம்பலம்.

— திருமதி க. சிவானந்தவல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org